

தி.மு.கழகத்தின் வாளும் – கேடயமுமாக திகழும் தி.மு.க. இளைஞரணியின் கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களை குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் இளைஞரணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அம்மாவட்ட பணிகள் குறித்து கேட்டு ஆய்வு செய்தார். இளைஞரணி சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒவ்வொரு பணியையும் – அவற்றின் தற்போதைய நிலையையும் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களிடம் கேட்டறிந்தார். இல்லந்தோறும் இளைஞரணி முன்னெடுப்பு தொடங்கி சமீபத்தில் நடைபெற்று முடிந்த விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வரை கடந்த ஓராண்டு காலத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞரணியினர் செய்த கழகப்பணி – மக்கள் நலப்பணிகளை விளக்கிக் கூறினர். அவரவர் கலந்து கொண்ட ஏற்பாடு செய்த கழக நிகழ்ச்சிகளின் விவரம் அடங்கிய மினிட் புத்தகங்கள் – பத்திரிகை செய்திகள் – புகைப்படத் தொகுப்புகளையும் காண்பித்தனர். திராவிட இயக்கத்தின் கொள்கை பாசறையாக திகழும் தி.மு.கழக இளைஞரணியின் பெருமை மேலும், மேலும் உயர்ந்திடும் வகையில் செயலாற்றிடுவோம் என்று கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களிடம் எடுத்துரைத்தார்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களால் உருவாக்கி – வளர்த்தெடுக்கப்பட்ட கழக இளைஞரணியை, அடுத்தகட்ட பாய்ச்சலுக்கு தயார் படுத்தும் வகையில், தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வரும், கழக இளைஞரணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். இதன் ஒருபகுதியாக, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் மற்றும் ஓசூர் மாநகர இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களை குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்தார். கலைஞர் அவர்களால் முதன்மை அணி என்று போற்றப்பட்ட இளைஞர் அணியில் அடுத்த தலைமுறை இளைஞர்களை கொள்கைமயப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகள் குறித்து கேட்டறிந்தார். கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் – இல்லந்தோறும் இளைஞரணி – கலைஞர்100 பேச்சுப் போட்டிக்கான ஏற்பாடு – நீட் ஒழிப்புப் போராட்டம் – சேலம் இளைஞரணி மாநாட்டுக்கான ஒருங்கிணைப்பு தேர்தல் நேரங்களில் பூத் அளவில் களப்பணியாற்றும் முறை என, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் மற்றும் ஓசூர் மாநகர இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை ஒவ்வொன்றாக ஆய்வு செய்து, தம்முடைய கருத்துக்களை தெரிவித்தனர். மினிட் புத்தகங்கள் – பத்திரிகை செய்திகள் – புகைப்படத் தொகுப்புகளை காண்பித்து கழகப்பணிகளை விளக்கிய அவர்களை வாழ்த்தினார்.



கரூர் மாவட்ட மற்றும் மாநகர இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களை குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் இளைஞரணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து உரையாடினார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் – நீட் தேர்வுக்கு எதிரான போராட்டங்கள் கலைஞர் 100 பேச்சுப் போட்டிக்கான ஏற்பாடுகள் இளைஞரணி மாநில மாநாட்டுப் பணிகள் நாடாளுமன்றத் தேர்தல் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் களத்தில் உழைத்தது என கரூர் மாவட்டம் & மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் ஆற்றிய பல்வேறு பங்களிப்புகளை ஆய்வு செய்தார். மினிட் புத்தகம் – பத்திரிகை செய்திகள் – புகைப்படங்கள் உள்ளிட்டவற்றை காண்பித்து தங்களின் இளைஞரணி பணிகளை விளக்கிக் கூறினர். அப்போது, கழக அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் மக்களிடம் கொண்டு செல்லவும் கழக இளைஞரணிப் பணிகளை தொய்வின்றி தொடரவும் இளைஞரணியின் கரூர் மாவட்ட மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்களை கேட்டுக்கொண்டார்.



தி.மு.க.இளைஞரணி நிர்வாகிகளின் பணிகளை கழக இளைஞரணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்து வருகிறார். இந்த ஆய்வுகளின் தொடர்ச்சியாக ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களை குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்தார். தந்தை பெரியாரை தந்த ஈரோட்டு மண்ணில் கழகத்தின் ஏற்றத்துக்காக, இளைஞரணி தம்பிமார்கள் செய்து வரும் பணிகளை அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் வாயிலாக கேட்டு அறிந்தார். இயக்கத்தில் இளைஞர்களின் எண்ணிக்கையை மென்மேலும் பெருக்குவதற்காக தொடங்கப்பட்ட ‘இல்லந்தோறும் இளைஞரணி’ முன்னெடுப்பு நீட் ஒழிப்பு போராட்டங்கள் இளைஞர் அணி மாநில மாநாட்டுக்கு இளைஞர்களை திரளாக பங்கேற்க செய்தது கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகம் அமைக்கும் பணி – “கலைஞர் 100” பேச்சுப் போட்டி உட்பட தலைமைக்கழகம் கட்டளையிட்டப் பணிகள் இளைஞர் அணி சார்பில் அன்பகத்தில் இருந்து வழங்கப்படும் பணிகள் போன்றவற்றை ஈரோடு மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மேற்கொண்ட விதம் குறித்து விரிவாக ஆய்வு செய்தார். மினிட் புத்தகம் பத்திரிகை செய்திகள் புகைப்படத் தொகுப்புகள் போன்றவற்றை காண்பித்து, அவர்களின் கழகப்பணி இளைஞரணி பணிகளை விளக்கினர்.



தி.மு.கழகத்தின் இதயத்துடிப்பான தி.மு.க. இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை கழக இளைஞரணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்து வருகிறார். அதன் ஒரு பகுதியாக, ஈரோடு வடக்கு மாவட்டக்கழக இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை நேற்று முன்தினம் நேரில் ஆய்வு செய்தார். பொறுப்புக்கு வந்து சுமார் ஓராண்டு நிறைவுற்றுள்ள நிலையில், கழகத்துக்கு அவர்கள் செய்துள்ள பங்களிப்புகள் குறித்து கேட்டறிந்தார். இளைஞரணியின் முக்கிய முன்னெடுப்புகளில் ஒன்றான இல்லந்தோறும் இளைஞரணி முன்னெடுப்பு – இளைஞரணி மாநாட்டுக்கான பணிகள் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் உழைத்தது – கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சட்டமன்ற தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகம் திறக்கும் பணிகள் கலைஞர் 100 பேச்சுப் போட்டிக்கான ஏற்பாடுகள் உள்ளிட்டவை குறித்து, மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களிடம் தனித்தனியாக கேட்டறிந்தார். மேலும், அவர்கள், கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்ற விவரம் – அவரவர் மேற்கொண்டுள்ள மக்கள் நலப்பணிகள் தொடர்பாக மினிட் புத்தகம் – செய்திக்குறிப்பு – புகைப்படங்களை காண்பித்தனர். அவற்றை பார்வையிட்டு இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களின் பணிகள் சிறக்க வாழ்த்தினார்.



நம் தி.மு.க. இளைஞரணியின் செயல்பாடுகளை கழக இளைஞரணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு வருவதன் ஒரு பகுதியாக, ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களை குறிஞ்சி இல்லத்தில் சந்தித்து அவர்களின் பணிகளை நேற்று முன்தினம் ஆய்வு செய்தார். இளைஞரணியின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கும் கழகத்தை இன்னும் வலிமையாக்க அவர்கள் மேற்கொண்டு வரும் பணிகள் குறித்தும் கேட்டறிந்தார். குறிப்பாக நடைபெற்று முடிந்துள்ள மக்களவைத் தேர்தலில், ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மேற்கொண்ட களப்பணி குறித்து விளக்கினர். மேலும், இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை நிலவரம் நீட் ஒழிப்பு போராட்டங்கள் சேலம் இளைஞரணி மாநில மாநாட்டுப் பணிகள் கலைஞர் 100 பேச்சுப் போட்டி ஆகியவற்றில் அவர்களின் பங்களிப்பை விளக்குகிற புகைப்படத் தொகுப்புகள் – மினிட் புத்தகம் – பத்திரிகை செய்திகள் உள்ளிட்டவற்றின் வாயிலாக எடுத்துக் கூறினர். ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களின் பணிகள் சிறக்க வாழ்த்தினார்.

## வாகை சந்திரசேகர் தலைமையில் - விஜயா தாயன்பன் வரவேற்பில்

# ‘கலைஞர் திரை இசைப் பாடல்கள்’ நூல் : கனிமொழி கருணாநிதி எம்.பி. வெளியிடுகிறார்.

## அமைச்சர் தங்கம் தென்னரசு - க.திருநாவுக்கரசு - மயிலை த.வேலு பங்கேற்பு!

சென்னை, ஜூலை 19 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, சென்னை, இராஜாஅண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள முத்தமிழ்ப் பேரவை, திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில், கவிஞர் நெல்லை ஜெயந்தா தொகுத்த “கலைஞர் திரை இசைப் பாடல்கள்” நூல் வெளியீட்டு விழா 29.7.2024 - சனிக்கிழமை அன்று மாலை 5.30 மணியளவில் நடைபெறுகிறது.

மாலை 5.30 மணிக்கு “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திரை இசைப் பாடல்கள்”. திரைப்பட இசையமைப்பாளர் கலைமாமணி வெ.தாயன்பன் “பல்லவி” இசைக்குழுவினருடன் வழங்கும் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் உறுப்பினர் - செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் வரவேற்கிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்/ தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை தாங்குகிறார்.

நாடாளுமன்றக் குழுத் தலைவர் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நூலை வெளியிட்டு விழாப் பேருரையாற்றுகிறார். நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நூலைப் பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

திராவிட இயக்க வரலாற்று ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, மயிலை. த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். கலைஞர் திரை இசைப் பாடல்கள் நூல் தொகுப்பாளர், கவிஞர் நெல்லை ஜெயந்தா நன்றி கூறுகிறார்.

## கழகப் பேச்சாளர் சேலம் சுஜாதா மருத்துவமனையில் அனுமதி!

சென்னை, ஜூலை 19 -

தி.மு. கழக மாநில பிரச்சாரக் குழுச் செயலாளர் சேலம் சுஜாதா அறுவை சிகிச்சைக்காக சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் நேற்று முன்தினம் (17-7 -2024) அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவரும் மாநில மகளிரணி இணைச் செயலாளருமான குமரி விஜய குமார் உடனிருந்து பார்த்துக்கொண்டார்.




தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியின் திருச்சி நாடாளுமன்றத் தொகுதியில் ம.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற துரை. வைகோ, சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆசியோர் தலைமையில் புதுக்கோட்டை நகர் முழுவதும் வீதி வீதியாகச் சென்று மக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப.சரவணன், கழக மூத்த முன்னோடிகளும், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக, வட்டக் கழக நிர்வாகிகளும், கூட்டணி கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.